செய்தி வெளியீடு : 43 நாள் - 23.04.2022

**"புதிய உலகக் கட்டமைப்பில் இந்தியாவின் பங்களிப்பு மற்றும் 2047-ஆம் ஆண்டிற்குள் உலக நாடுகளை வழிநடத்தும் நாடாக இந்தியா இருக்க வேண்டும்" - என்ற தலைப்பில், உதகமண்டலத்திலுள்ள ஆளுநர் மாளிகையில், தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கு.**

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், திரு. ஆர். என்.ரவி அவர்கள், 25.04.2022 மற்றும் 26.04.2022 ஆகிய நாட்களில், உதகமண்டலத்தில் உள்ள ஆளுநர் மாளிகையில் தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கான கருத்தரங்கை தொடங்கி வைக்கவுள்ளார். தமிழ்நாடு ஆளுநர் மாளிகை இந்த கருத்தரங்கை ஏற்பாடு செய்து வருகிறது.

பின்வரும் கருத்துக்களையும் செயல்திட்டத்தையும் முன்வைப்பதே இக்கருத்தரங்கின் நோக்கமாகும்.

(i) புதிய உலகக் கட்டமைப்பில் இந்தியாவின் பங்கு.

(ii) 2047 ஆம் ஆண்டிற்குள் உலக நாடுகளை வழிநடத்தும் நாடாக இந்தியா இருக்க வேண்டும்.

இந்த இரண்டு நாள் கருத்தரங்கில், பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவர் பேராசிரியர் எம்.ஜெகதீஷ் குமார் மற்றும் ஜோஹோ நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் பத்மஸ்ரீ திரு.ஸ்ரீதர் வேம்பு ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர். மாநிலத்திலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள், மத்தியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள தனியார் பல்கலைக்கழங்களின் துணைவேந்தர்கள் தங்களுடைய பல்கலைகழகங்களின் பேராசிரியர்கள் மற்றும் இணைப் பேராசிரியர்களுடன் கருத்தரங்கில் பங்கேற்கவுள்ளனர்.

---

ஆளுநர் மாளிகை, சென்னை - 22 ஓம் /-

நாள் - 22.04.2022 கூடுதல் இயக்குநர்
(ம.தொ.)